**ஜனவரி – 20**

# TNPSC துளிகள்

- Axis வங்கி மற்றும் CRMNEXT சொல்யூஷன் ஆகிய நிறுவனங்கள், "சிறந்த CRM (வாடிக்கையாளர் உறவு மேலாண்மை) அமைப்பு அமலாக்கத்திற்காக" IBS நுண்ணறிவு உலகளாவிய ஃபின்டெக் கண்டுபிடிப்பு விருதுகள் 2021 என்ற விருதினை வென்றன.
  - உலகளாவிய வங்கியாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களுக்கான மிக முக்கியமான விருதுகளில் இதுவும் ஒன்றாகும்.

# தேசியச் செய்திகள்

## காலர்வாலி புலி உயிரிழப்பு




- 'காலர்வாலி' என்று பிரபலமாக அறியப் படும் இந்தியாவின் "சூப்பர்மாம்" புலி (Supermom Tiger), மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் காப்பகத்தில் வயது முதிர்வு காரணமாக உயிரிழந்தது.
- இதற்கு வயது பதினாறுக்கும் மேல் ஆகும்.
- ‘காலர்வாலி’ புலி தனது வாழ்நாளில் 29 குட்டிகளை ஈன்றதிற்காக அறியப் படுகின்றது.
- இது ஒரு உலக சாதனை என்று நம்பப்படுகிறது.
- இந்தப் புலிக்கு வனத்துறையினர் வழங்கிய அதிகாரப்பூர்வ பெயர் T-15 என்பதாகும்.
- ஆனால் உள்ளூர் மக்களால் இது 'காலர்வாலி' என்று அழைக்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டில் இப்பூங்காவில் ரேடியோ காலர் பொருத்தப்பட்ட முதல் புலி என்ற ஒரு பெருமையைப் பெற்றதால், அதற்கு இவ்வாறு பெயர் வைக்கப்பட்டது.
- இதன் குறிப்பிடத்தக்க பங்களிப்பால் மத்தியப் பிரதேசம் ‘புலி மாநிலம்’ (Tiger State) என்ற ஒரு அடையாளத்தையும் பெற்றது.

## வங்காள விரிகுடாவில் கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி - இந்தியா மற்றும் ஜப்பான்

- வங்காள விரிகுடாவில் இந்தியக் கடற்படை மற்றும் ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை

ஆகியவற்றுக்கிடையே ஒரு கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சியானது கோவிட்-19 பெருந் தொற்று காரணமாக ஒரு நேரடி தொடர்பில்லாத முறையில் நடத்தப் பட்டது.

- இந்தியாவின் தரப்பில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் (ஐஎன்எஸ்) ஷிவாலிக் மற்றும் ஐஎன்எஸ் காட்மட் ஆகியவை இதில் கலந்து கொண்டன.
- உரகா மற்றும் ஹிராடோ ஆகியவை ஜப்பானியத் தரப்பிலிருந்து பங்கேற்றன.




## AFC மகளிர் கால்பந்து ஆசியக் கோப்பை இந்தியா 2022




- ஆசியக் கால்பந்து கூட்டமைப்பின் (AFC - Asian Football Confederation) மகளிர் கால்பந்து ஆசியக் கோப்பை இந்தியா 2022 என்ற ஒரு போட்டியினை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 20 முதல் மும்பை, நவி மும்பை மற்றும் புனேவில் நடத்த இந்தியா தயாராக உள்ளது.
- இந்தப் போட்டியில் 12 அணிகள் இந்தக் கோப்பைக்காக போட்டியிடும்.
- 2023 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் நடத்த இருக்கும் FIFA மகளிர் உலகக் கோப்பைக்கான ஆசிய தகுதியின் இறுதிக் கட்டமாகவும் இந்தப் போட்டி இருக்கும்.

- 2018 ஆம் ஆண்டின் மகளிர் ஆசியக் கோப்பையை வென்ற ஜப்பான் தற்போது நடப்புச் சாம்பியனாகவும் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவர்




- மால்டா என்ற நாட்டினைச் சேர்ந்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினரான ராபர்ட்டா மெட்சோலா என்பவர் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவது பெண்மணி இவராவார்.
- இவர் ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்கு வேண்டி இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுள் இளையவர் ஆவார்.

## இன்ஃபினிட்டி பாலம்



- ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாயில் உள்ள புகழ்பெற்ற ‘இன்ஃபினிட்டி பாலம்’ முதல் முறையாக வாகனங்கள் செல்ல திறக்கப்பட்டுள்ளது.
- அதன் வடிவமைப்பு முடிவிலிக்கான (∞) ஒரு கணித அடையாளத்தை ஒத்திருக்கிறது.
- இது துபாயின் எல்லைகளற்ற மற்றும் முடிவுகளற்ற இலக்குகளைப் பிரதிபலிக்கிறது.

- இது ஒவ்வொரு திசையிலும் ஆறு பாதைகளையும் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்காக ஒருங்கிணைந்த ஒரு 3 மீட்டர் பாதையையும் கொண்டுள்ளது.
- இது 300 மீட்டர் நீளமும் 22 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.
- இந்தப் பாலம் டெய்ரா மற்றும் பர் துபாய் ஆகியவற்றுக்கிடையேயான ஒரு இணைப்பை மேம்படுத்துகிறது.

### உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்ட அறிக்கை





- சர்வதேச தொழிலாளர் அமைப்பு "உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் தனது அறிக்கையை வெளியிட்டது.
- அந்த அறிக்கையில், 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய வேலையின்மை 207 மில்லியனாக இருக்கும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு கணித்துள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டை விட கிட்டத்தட்ட 21 மில்லியன் அதிகமாகும்.
- 2022 ஆம் ஆண்டில் மொத்த வேலை நேரம் தொற்றுநோய்க்கு முந்தைய அளவை விட 2% குறைவாகவே இருக்கும்.
- 2022 ஆம் ஆண்டில் 52 மில்லியன் என்ற அளவில் முழு நேர வேலைகளுக்குச் சமமான வேலைகளின் பற்றாக்குறை இருக்கும்.
- இதன் 2021 ஆண்டிற்கான ஜூன் மாத அறிக்கையை ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் அறிக்கை ஒரு கணிசமான சரிவைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில், 2019 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுடன் ஒப்பிடும் போது வேலை நேரங்களின் பற்றாக்குறை 2022 ஆம் ஆண்டில் 1 சதவிகித அளவிற்கும் குறைவாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### நாராயண் தேப்நாத்

- வங்கமொழியின் பழம்பெரும் நகைச்சுவைப் புதினத்திற்கான கலைஞர், எழுத்தாளர் மற்றும் பத்திரிக்கையாளரான நாராயண் தேப்நாத் காலமானார்.
- அவருக்கு வயது 97.
- இவர் ஹண்டா போண்டா (1962), பந்துல் தி கிரேட் (1965) மற்றும் நோன்டே ஃபோன்டே (1969) போன்ற பிரபலமான வங்க மொழி நகைச்சுவைச் சித்திரங்களை உருவாக்கியவர் ஆவார்.

- 2021 ஆம் ஆண்டில், தேப்நாத் இந்தியாவின் நான்காவது உயரிய குடிமகன் விருதான பத்மஸ்ரீ விருதைப் பெற்றார்.




## எம்.கே. பிரசாத்

- பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலரும், 'Save Silent Valley' பிரச்சாரகருமான பேராசிரியர் எம் கே பிரசாத் சமீபத்தில் காலமானார்.
- கேரளாவின் சைலண்ட் வேலியில் (அமைதி பசுமைப் பள்ளத்தாக்கு) உள்ள பசுமையான வெப்ப மண்டல மழைக் காடுகளை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான ஒரு வரலாற்று இயக்கத்தில் அவர் ஒரு முக்கிய நபராக இருந்தார்.
- 'கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத்' என்ற பிரபலமான அறிவியல் இயக்கத்திற்கும் அவர் தலைமை தாங்கினார்.



## தேசியப் புத்தாக்க நிறுவனங்கள் விருதுகள் 2021


- இது தேசியப் புத்தாக்க நிறுவனங்கள் விருதுகள் விழாவின் இரண்டாவது பதிப்பாகும்.
- இது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இதில் வெற்றியாளர்களாக மொத்தம் 46 புத்தாக்க நிறுவனங்கள் அங்கீகரிக்கப் பட்டு உள்ளன.
- மாநில வாரியாக, 46 விருதுகளில் 14 விருதுகளைப் பெற்று அதிக எண்ணிக்கையிலான

விருதுகளை கர்நாடகா பெற்றுள்ளது.

- ஃபின்டெக் (fintech) என்ற நிதித் தொழில்நுட்பப் பிரிவில் நிதியினை உள்ளடக்கிய ஒரு துணைத் துறையில், பெங்களூரைச் சேர்ந்த நாஃபா இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு நிறுவனம் வெற்றியாளராக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஃபின்டெக் என்ற நிதித் தொழில்நுட்பப் பிரிவின் காப்பீட்டுத் துணைத் துறையில், அம்போ ஐட்டெக் பிரைவேட் லிமிடெட் (Umbo Idtech Private Limited) என்ற ஒரு நிறுவனம் விருதை வென்றது.
- ரோபோடிக்ஸ் துணைத் துறையில் சாகர் டிஃபென்ஸ் நிறுவனம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- பெண்கள் தலைமையிலான புத்தாக்க நிறுவனங்கள் என்ற பிரிவில், ஜெய்ப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஃபிரான்டியர் மார்க்கெட்ஸ் என்ற நிறுவனம் கவுரவிக்கப் பட்டது.




## சந்திரசூர் கோஸ் எழுதிய புத்தகம்




- சந்திரசூர் கோஸ் என்பவர் எழுதிய "போஸ் : தி அன்டோல்ட் ஸ்டோரி ஆஃப் அன் இன்கன்வீனியண்ட் நேஷனலிஸ்ட்" (Bose: The Untold Story of An Inconvenient Nationalist) என்ற புதிய புத்தகம் 2022 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்படும்.
- சுதந்திர இந்தியாவின் வளர்ச்சி, வகுப்புவாதம், புவிசார் அரசியல் மற்றும் அரசியல்

சித்தாந்தம் பற்றிய சுபாஷ் சந்திர போஸின் எண்ணங்கள் மற்றும் கருத்துகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

- இந்தப் புத்தகம் நேதாஜியின் (சுபாஷ் சந்திரபோஸ்) சொல்லப்படாத மற்றும் அறியப் படாத கதைகளையும் எடுத்துரைத்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## சிறந்த FIFA கால்பந்து விருதுகள் 2021

- 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த FIFA கால்பந்து விருதுகள் என்ற விழா சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரத்தில் இணைய வழியில் நடத்தப் பட்டது.
- கால்பந்தில் சிறந்த சாதனைகளைப் படைத்த வீரர்களைக் கவுரவிப்பதற்காக வேண்டி இது நடத்தப்பட்டது.
- ஸ்பெயினின் அலெக்ஸியா புட்டெல்லாஸ் மற்றும் போலந்து/பேயர்ன் முனிச் அணியின் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி ஆகியோர் முறையே பெண்கள் மற்றும் ஆண்கள் கால் பந்தில் சிறந்த FIFA வீரருக்கான விருதைப் பெற்றனர்.
- 2020 ஆம் ஆண்டில் முதல் விருதைப் பெற்ற பிறகு, லெவன்டோவ்ஸ்கி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த FIFA ஆண்கள் வீரர் விருதை வென்றுள்ளார்.

| Category | Winner |
|---|---|
| Best FIFA Men's Player | Robert Lewandowski (Bayern Munich, Poland) |
| Best FIFA Women's Player | Alexia Putellas (Barcelona, Spain) |
| Best FIFA Men's Goalkeeper | Édouard Mendy (Chelsea, Senegal) |
| Best FIFA Women's Goalkeeper | Christiane Endler (Paris Saint-Germain and Lyon, Chile) |
| Best FIFA Men's Coach | Thomas Tuchel (Chelsea, Germany) |
| Best FIFA Women's Coach | Emma Hayes (Chelsea, England) |
| FIFA Fair Play Award | Denmark national football team and medical staff |
| FIFA Special Award for an Outstanding Career Achievement | Christine Sinclair (Female) & Cristiano Ronaldo (Male) |

# முக்கிய தினங்கள்

## தேசியப் பேரிடர் மீட்புப் படை எழுச்சி ஆண்டு - ஜனவரி 19

- 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் தேதி அன்று நடைமுறைக்கு வந்ததிலிருந்து தேசியப் பேரிடர் மீட்புப் படையானது இந்த நாளைக் கொண்டாடுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், தேசியப் பேரிடர் மீட்புப் படையானது அதன் 17வது எழுச்சி ஆண்டைக் கொண்டாடுகிறது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் 12 தேசியப் பேரிடர் மீட்புப் படையின் படைப் பிரிவுகள் உள்ளன.
- மேலும் 13,000 தேசியப் பேரிடர் மீட்புப் படைப் பணியாளர்கள் பாதுகாப்பான நாட்டை உருவாக்க வேண்டி பணி புரிகின்றனர்.
- தேசியப் பேரிடர் மீட்புப் படையானது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கீழ்

உள்ள ஒரு இந்திய சிறப்புப் படையாகும்.

❖ பேரிடர் அச்சுறுத்தும் சூழ்நிலைகளில் சிறப்பான மீட்புப் பணிகளை மேற்கொள்ளச் செய்வதற்காக வேண்டி இது உருவாக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★